**மாதிரி வினாத்தாள்**

நிறுமக் கணக்குகள் - பகுதி II

12th Standard

**கணக்குப்பதிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 02:00:00 Hrs

Total Marks : 100

## பகுதி - அ

5 x 1 = 5

1) நிறுமச் (திருத்தப்பட்ட) சட்டம் 2000 இன் படி பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ---------------- வகையான பங்குகளை மட்டும் வெளியிடும்.

(a) 1 (b) 2 (c) 3

2) பொது வெளியீடு அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச நாட்கள்

(a) 3 நாட்கள் (b) 5 நாட்கள் (c) 7 நாட்கள்

3) இ.ப.மா.வா (SEBI) இன் கூற்றுப்படி, விண்ணப்பத்தின் போது குறைந்தபட்சம் வசூலிக்கும் தொகை வெளியீட்டு விலையில் ------------ ஆகும்.

(a) 10 % (b) 25 % (c) 50 %

4) வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டால் அதனை ------------- என்று அழைக்கலாம்.

(a) மிகை ஒப்பம் (b) குறை ஒப்பம் (c) முழு ஒப்பம்

5) ஒரு நிறுமம் விடுக்கக் கூடிய அதிகபட்ச அழைப்புகளின் எண்ணிக்கை -------------

(a) ஒன்றாகும் (b) இரண்டாகும் (c) மூன்றாகும்

## பகுதி - ஆ

5 x 5 = 25

6) அழைப்பு நிலுவை குறித்து நீவிர் அறிவது யாது ?

7) அழைப்பு முன்பணம் என்றால் என்ன ?

8) மிகை ஒப்பம் மற்றும் குறை ஒப்பம் இடையேயான வேறுபாடுகள் யாவை ?

9) சாதாரணப் பங்குகள் என்றால் என்ன ?

10) பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல் பற்றி நீவிர் அறிவது யாது ?

## பகுதி - இ

4 x 12 = 48

11) ஒரு நிறுமம் ரூ. 10 விதம் 20,000 பங்குகளை வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பத்தின் போது ரூ. 3

ஒதுக்கீட்டின் போது ரூ. 3

முதல் மற்றும் இறுதி

அழைப்பின் போது ரூ. 4 அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

12) மேரி வரையறு நிறுமம் ரூ. 10 விதம் 1000 பங்குகளை ரூ. 2 முனைமத்தில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 4

ஒதுக்கீட்டின் போது ரூ. 4 (முனைமத்துடன்) தேவையுள்ள பொழுது மீதித் தொகை அழைக்கப்படும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது. உரிய குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

13) ஆல்பா வரையறு நிறுமம் 1.1.98 அன்று பங்கொன்று ரூ. 10 வீதம் 1,00,000 பங்குகளை விண்ணப்பத்தின் பொழுது ரூ. 2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. நிறுமம் 1,20,000 பங்குகள் வேண்டி விண்ணப்பம் பெற்றது. மிகுதியான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு தொகை திருப்பப்பட்டது. தேவையான பதிவுகளை தருக.

14) அசோக் வரையறு நிறுமத்தின் 300 பங்குகளை பங்கொன்று ரூ. 10 வீதம் (முழுவதும் அழைக்கப்பட்டவை) வைத்திருந்த ராம் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகையான பங்கொன்றின் மீது ரூ. 3 மற்றும் இறுதி அழைப்புத் தொகையாக பங்கொன்றிக்கு ரூ. 4 செலுத்தத் தவறவே பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன . இப்பங்குகளில் 250 ஷ்யாம் என்பவருக்கு ரூ. 2000 த்திற்கு, மறுவெளியீடு செய்யப்பட்டது . பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டுக்கான பதிவுகளைத் தருக .

## பகுதி - ஈ

1 x 20 = 20

15) பெயரளவு முதல் ரூ.5,00,000 பெற்றுள்ள ஒரு கூட்டு பங்கு நிறுமம், அதனை ரூ.100 விதம் 5,000 பங்குகளாக பிரித்து வெளிப்பட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் பொது | ரூ. | 30 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ. | 20 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ. | 20 |
| இறுதி அழைப்பின் பொது | ரூ. | 20 |

அணைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது.

உரிய குறிபேட்டுப் பதிவுகள் தருக.

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in